1980 பிப்ரவரி 5]

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் விடையளிக்கும்போது 1.50 இலட்சம், 37.60 இலட்சம் என்று புள்ளிக்குப் பின்னால் வரக்கூடிய எண்ணிக்கை ஒரு வேளை ஐம்பது லட்சம், அறுபது லட்சம் என்று குறிப்பதுபோல் கூறுகிறார்கள். புள்ளிக்குப் பின்னால் எப்படிப் படிக்க வேண்டுமென்ற முறைப்படி அமைச்சர் அவர்கள் படிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்று புள்ளி ஐந்து சைபர் லட்சம் என்று சொல்ல வேண்டுமென்று பேராசிரியர் சொல்லுகிறார்.

திரு. ந. தனசேகரன் : நான் கேட்க விரும்புவது 260 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை விஸ்தரிப்புத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள்ளாக முற்றுப்பெறும்? குறிப்புகள் திரும்பக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்படி மேலே வருவதும் கீழே போவதுமான முறையை நிறுத்தி உடனடியாக மருத்துவ மனை வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்த மருத்துவ மனை விஸ்தரிப்பு அவசியம், தேவைதான் என்பதை உணர்ந்துதான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. திருத்திய மதிப்பீடு வரைபடங்கள் வந்த பிறகு பரிசீலித்து வேலைகள் துவங்க ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தூத்துக்குடி மருத்துவ மனை ஆய்வு எப்போது எடுத்துக் கொள்ளப்பட்டது? எவ்வளவு காலமாக ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? ஆய்வு எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சுமார் 260 படுக்கைகள் கொண்ட பிரிவுக்கு ஆய்வு வரைபட மதிப்பீடு சென்ற ஆண்டு அனுப்பப்பெற்று 37.60 இலட்சம் செலவில் பொறியாளர் வரை படங்கள், மதிப் பீடுகளை அனுப்பியிருக்கிறார். அதன்பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும்.

அரசு மருத்துவமனைகளில் தடுப்பு மருந்துகள் வழங்கல்.

*வினா எண் 58— திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தடுப்பு மருந்துகளான டிரிப்பிள் ஆண்டிஜன், போலியோ சொட்டுமருந்துகள், பிசிஜி போன்றவைகளை எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் இலவசமாகப் போடும் ஆய்வு ஏதேனும் அரசுக் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இலவசமாகப் போடப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : இனியாவது தடுப்பு மருந்துகளை ஆரம்பச்சுகாதார நிலையங்கள் மூலமாக விநியோகிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதுபோன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் சிலவற்றை ஆரம்பச்சுகாதார நிலையங்கள் மூலமாக அளித்துக் கொண்டிருக்கிறோம். சிலவற்றை மாவட்ட மருத்துவ மனை வாயிலாக வழங்கிக்கொண்டு இருக்கிறோம்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, இந்த நோய்த் தடுப்பு மருந்துகள் சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாக அளிப்பதன்மூலம் இந்த நாட்டில் நல்ல பிரஜைகள் உருவாக வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து இலவசமாக மருந்துகளை அளிப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது இதுபோன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் நம்முடைய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாகவும் வட்டத் தலைமை மருத்துவ மனை மூலமாகவும் இலவசமா வழங்கப்படுகின்றன.

எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருத்துவமனை.

*வினா எண். 59— திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை தொகுதி எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருத்துவ மனை அமைப்பது பற்றிய கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் 1979–80-ல் அங்கு மருத்துவமனை திறக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : (அ) ஆம்.

(ஆ) எலவானாசூர் கோட்டையில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துவது பற்றிய கோரிக்கை கால்நடைப் பராமரிப்பு இயக்குநரின் ஆய்வில் உள்ளது.